
8675



# விசாக தீபம்

திருக்கோணமலை சமாது பிள்ளையார் ஆலயம்

அமரர்.

## விஸ்வலிங்கம் விசாகப்பெருமாள்

(நகரசபை வரிஇறுப்பாளர், திருகோணமலை)

அறிவுக்களஞ்சியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு - 15.10.2012

# விசாக தீபம்

Acc no - 8675
294.5



## அமரர். திரு. விஸ்வலிங்கம் விசாகப்பெருமாள்

(திருகோணமலை நகராட்சிமன்றம் வரியிறுப்பாளர்) அவர்கள்



இறையடி சேர்ந்தமை குறித்த

31வது நாள் நினைவு மலர்

அறிவுக்களஞ்சியம்


01.09.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாக தீபம்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 14 | 02 |
| 01 | 08 |
| 1931 | 2012 |

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும்,
திருக்கோணமலை பிரதான வீதியை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர்.

## திரு. விஸ்வலிங்கம் விசாகப்பெருமாள்

(திருகோணமலை நகராட்சிமன்றம் வரியிறுப்பாளர்)

அவர்கள்

### திதி வெண்பா

நந்தன வருடம் என்னும் நயமிகு ஆடித் திங்கள்
வந்தநல் பூரணைத்திதியில் - இந்த
வாழ்வினை விட்டு விசாகப் பெருமாள் ஈசன்
தாள்மலர் சேர்ந்த நாளாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண பந்தத்தில் இணைவு



திரு. விஸ்வலிங்கம் விசாகப்பெருமாள்

அமரர் (2012)

திருமதி. தனலெட்சுமி விசாகப்பெருமாள்

அமரர் (2002)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை



எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் உறைவிடமாய்
அம்மா இறையடி சேர்ந்த பின்னும்
அன்பின் ஊற்றாய் அணையாத தீபமாய்
வெளிநாட்டில் வாழ்ந்த எங்கள் எல்லோருடனும்
நாள் தவறாது தொலைபேசியில் உரையாடி
உங்கள் உடல் நிலையைக் கவனியாது
எமது உடல் நலம் விசாரித்து
நாங்கள் நலமுடன் வாழ இறையருள் வேண்டி
இறை தொண்டாற்றிய
எமது குடும்பத் தலைவனின் ஆத்மா
இறைவன் திருவடியில் சாந்தியும், அமைதியும் பெற
திருக்கோணமலையில் வீற்றிருந்து அருள்புரியும்
சமாது தங்க விநாயகரை பிரார்த்தித்து
அமரர் தம் பாதங்களில் "விசாக தீபம்" என்னும்
இம் மலரை
கண்ணீரால் எழுதி காணிக்கையாக்குகின்றோம்.

-குடும்பத்தினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் என்றால் என்ன?

பிறப்பு என்பதொன்று இருக்குமானால் இறப்பு என்பதொன்று நிச்சயமானது. தவிர்க்க முடியாதது. மரணம் என்பது ஒருவனை மற்றவர்களிடமிருந்து பிரிக்கின்றது என்கின்ற அளவில் துன்பத்திற்குரியதே. இறந்தவர்களுடைய பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் போன்றோரை மரணம் துன்பத்தில் ஆழ்த்தும். மரணம் சம்பவிக்கும் பொழுது ஆன்மா ஒரு வீட்டை காலி செய்து கொண்டு இன்னொரு வீட்டிற்கு குடிபோகின்றது என இந்து மதம் கூறுகின்றது.

"ஐயும் தொடர்ந்து விழியும் செருகி அறிவிழந்து மெய்யும்
பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவேன்யான்
செய்யும் திருவெற்றியூர் உடையீர் திருநீறும் இட்டுக் கையும்
தொழப்பண்ணி ஐந்தெழுத்து ஓதவும் கற்பியுமே"

என்ற பட்டினத்தாரின் வேண்டுகோளுக்கிணங்க அழுது அழுது புலம்புதலை விட்டு இறந்த ஆத்மா இறையடி சேர இறைவனைப் பிரார்த்திப்பதே சிறந்த வழி. வாழ்ந்த காலத்தில் இறைபக்தியோடு வாழ்ந்த பெரியார் அமரர். விஸ்வலிங்கம் விசாகப்பெருமாள் அவர்களின் ஆத்மா சாந்தியடைய "விசாக தீபம்" என்னும் சிறு நூலை வெளியிடுகின்றோம். ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஸ்ரீ முருகன் தொண்டர் சபை,
வில்லூன்றி - திருகோணமலை,
இலங்கை

ந. செல்வஜோதி
கௌரவ. செயலாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின் றகலா
மாண்பினர் காண் பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன்
மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தா உனக்காளாயினி அல்லேனெனலாமே

மீளா அடிமை உமக்கேயானாய்ப் பிறரை
வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால்
மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல்
சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து
போதீரே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல் மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சிவாயவே

கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமை பல
செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும் பிரியாது
வணங்குவேன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானதுறை அம்மானே

## திருவாசகம்

யானே பொய் என் நெஞ்சம்
பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனை வந்து கூறும் ஆறே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உவப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயே
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மண்ணுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன்
அடியோமுக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

## புராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பிறவி அலை ஆற்றினிந் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதி குரு வாக்கியம் பொருளாலே
உனது பத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமானே

## அபிராமி அம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயில் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம்! அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்து உருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின்
அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி
ஏகாம்பனே

ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேரும் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்தாள் சதம் கச்சி ஏகாம்பனே

ஐயும் தொடர்ந்து விழியும் சொருகி அறிவிழந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்றபோதொன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றியூர் உடையீர் திருநீறும் இட்டுக்
கையும் தொழப் பண்ணி ஐந்தெழுத்து ஓதவும் கற்பியுமே

கை ஒன்று செய்ய விழி ஒன்று நாடக்
கருத்தொன்று எண்ணப்
பொய் ஒன்று வஞ்சக நாப் பேசப் புலால் கமழும்
மெய் ஒன்று சாரச் செவி ஒன்று கேட்க
விரும்பும் யான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய்
வினை தீர்த்தவனே.

## கந்தரனுபூதி

ஆடும் பரி வேலணி சேவலெனப்
பாடும் பணி யேபணி யா அருள்வாய்
தேடுங்கய மாமுக னைச் செருவில்
சாடுந்தனி யானை சகோதரனே

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜர் பத்து

தாயாரிருந்தென்ன தந்தையுமிருந்தென்ன
தன் பிறவி யுறவு கோடி

தாமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன
தாரணியை யாண்டுமென்ன

சேயர்களிருந்தென்ன குருவாயிருந்தென்ன
சீஷர்களிருந்து மென்ன

சித்து பல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்

ஓயாது மூழ்கினும் என்ன பலன் எமனோலை
ஒன்றைக் கண்டு தடுக்க

உதவுமோயிதுகளெல்லாம் சந்தையுறுவென்று தான்
உன்னிரு பாதம் பிடித்தேன்

யார்மீது வுன்மனமிருந்தாலும் உன்
கடைக் கண் பார்வையது போதும்

ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லை வாழ் நடராஜனே

-*-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க
மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம்
வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்

## உடலுக்கு வரும் நோய்களை நீக்கும் திருநீற்றுப் பதிகம் -

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

## திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான்
திருநீறே

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போகந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையிலுள்ளது நீறு
சீதப் புனல் வயல் சூழ்ந்த திருவாலவாயான்
திருநீறே

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான்
திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியை தருவது நீறு
சேணந் தருவது நீறு திரு ஆலவாயான்

திருநீறே

பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந் தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான்

திருநீறே

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருந்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான்

திருநீறே

ஆலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் ஆலவாயான்

திருநீறே

இராவணன் மேலது நீறு எண்ணத் தருவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவமாவது நீறு
அரா வணங்குந் திருமேனி ஆலவாயான்



திருநீறே

மாலொ டயனறியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண் பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆலவாயான்

திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளர் ஏத்துந் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்தேத்தும் ஆலவாயான்
திருநீறே


ஆற்றல் அடல் விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே

காலையும், மாலையும் பக்தியுடன் இத் திருமுறை பாடல்களை பாடி வந்தால் உடலுக்கு வரும் நோய்களின் தாக்கம் குறைவாக இருக்கும்.

## கிரக தோஷங்களை நீக்கும் கோளறு பதிகம் -

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

வேயுறு தோளி பங்கன் விட முண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன் பொதி மத்தமாலை புனல் சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொடாறும்
உடனாய நாள்கள் அவை தாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

உருவளர் பவள மேனி ஒளி நீறணிந்து
உமையோடும் வெள்ளை விடை மேல்
முருகவர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

மதிநுதல் நங்கையோடு வடபாலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனொடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதி குணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்வரி அதளதாடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடு முடியாய்
நாண்மலர் வள்ளி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலை யானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆனரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

செப்பிள முலைநன் மங்கை பொருபாகமாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வேள்பட விழிசெய் தன்று விடை மேலிருந்து
மடவாள் தனோடு முடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர் சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன் றனோடும்
இடரான் வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

பல பல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோ டெருக்கு முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர் மிசையோனு மாலும் மறையோடு தேவர்
வரு காலமான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமனை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

தேனமர் பொழில் கொளாலை விளை செந்நெல் துன்னி
வளர் செம் பொன் எங்கும் நிகழ
நான் முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ண முரை செய்
ஆன சொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே

(இக் கோளறு பதிகத்தை காலையும், மாலையும் ஓதுகின்ற அடியவர்கள் தேவலோகச் சிறப்போடு வாழ்வார்கள் என ஞான சம்பந்தர் ஆணையிட்டுக் கூறுகின்றார்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக தோத்திரம்

## ஞாயிறு

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

## திங்கள்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் புரிய
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சந்திரா போற்றி

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவில்லாதருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரஹனே அவதிகள் நீக்கு

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடி போற்றி
பதம் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருளும் உத்தமா போற்றி

## வியாழன்

குணமுள்ள வியாழ குரு பகவானே
மனமுள்ள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ பதகுருனேசா
கிரகதோஷ மின்றிக் கடாட்சித் தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளி

சுந்திர மூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே

## சனி

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வர தேவே
இச் சகம் வாழ இன்னருள் தாதா

## ராகு

அரவெனும் ராகு ஐயனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
அக அருள் புரி அனைத்திலும் வெற்றி
ராகு கனியே ரெம்மியா போற்றி

## கேது

கேது தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேது தேவே கேண்மையாய் ரஷி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்

## அறிவு

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

- பாரதி -

படிப்பு எதற்கு? அறிவுக்கு அறிவு எதற்கு?
மனிதன் மனித தன்மையோடு வாழ்ந்து
மற்ற மனிதருக்கு உதவியாய்
தொல்லை கொடுக்காதவனாய்
நாணயமாக வாழ்வதற்கு

- ஈ. வே. ரா. பெரியார் -

## அன்பு

அன்பு எதையும் தேடியலையாமல்
இருந்தால் தான் அன்பு மலரும்
அது நம்மை அறியாமலேயே வரும்
அது காலத்திற்குட்பட்டது அல்ல
இந்த அன்பு தனக்கே உரியதென்றும்
எல்லோருக்கும் உரியதென்றும் கூறலாம்
அன்பு என்பது ஒரு மலரின் மணம் போல
மலரின் மணம் எல்லோருக்கும் பொதுவானது
மலர் தன் மணத்தை எல்லோருடனும்
பகிர்ந்து கொள்ளும் அது போன்றது தான் அன்பு

- ஜே. கிருஸ்ணமூர்த்தி -

படகு தண்ணீரில் இருக்கலாம் ஆனால்
தண்ணீர் படகுக்குள் நுழையக் கூடாது.
மனிதன் உலகத்தில் வாழலாம் ஆனால்
உலக ஆசை அவனிடத்தில் இருக்கக் கூடாது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழு நற்குணங்கள்

☞ ஏழ்மையிலும் நேர்மை

☞ கோபத்திலும் பொறுமை

☞ தோல்வியிலும் விடா முயற்சி

☞ வறுமையிலும் பரோபகாரம்

☞ துன்பத்திலும் தைரியம்

☞ செல்வத்திலும் எளிமை

☞ பதவியிலும் பணிவு

**மஞ்சட் கயிற்றில் தாலி கட்டும் போது மூன்று முடிச்சுப் போடுவார்கள்.**

- முதலாவது முடிச்சு - கணவனுக்கு கட்டுப்பட்டவள்
- இரண்டாவது முடிச்சு - தாய் தந்தைக்கு கட்டுப்பட்டவள்
- மூன்றாவது முடிச்சு - தெய்வத்துக்குப் பயந்தவள்

## மங்கையருக்கு சில குறிப்புகள்

- சுமங்கலிகள் நெற்றியில் குங்குமம் இல்லாது இருக்கக் கூடாது.
- இரவில் வீட்டைப் பெருக்கி குப்பையை வெளியே போடக் கூடாது.
- பெண்கள் பூசணிக்காயை வெட்டக் கூடாது. கர்ப்பிணிப் பெண்கள் தேங்காயை உடைக்கக் கூடாது.
- வாசல் படிகளில் தலை விரி கோலமாக உட்காரக் கூடாது.
- வீட்டுக்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு இல்லத்தரசிகள் குங்குமம் கொடுத்து வழியனுப்ப வேண்டும்.
- ஒட்டுப் பொட்டுக்களைத் தவிர்த்தல் வேண்டும்.
- அதிகாலையெழுந்து வீடு வாசல் பெருக்கி நீர் தெளித்து வாசலில் கோலமிடல் வேண்டும்.
- உரல், அம்மி, முறம் (சுளகு), வாசற்படி, உலக்கை இவற்றின் மீது உட்காரக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருணகிரிநாதர் பாடிய நூல்கள்

- திருப்புகழ்
- கந்தர் அனுபூதி
- கந்தர் அலங்காரம்
- கந்தர் அந்தாதி
- வேல் விருத்தம்
- மயில் விருத்தம்
- சேவல் விருத்தம்
- வேல் வகுப்பு
- திரு வகுப்பு

## திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் எழுதிய நூல்கள்

- திருப்புகழ் விரிவுரை
- சிவனருட் செல்வர்
- கந்தவேள் கருணை
- கந்தரலங்காரம் விரிவுரை
- கந்தரனுபூதி விரிவுரை
- மகாபாரதம்
- பழநிமலைப் பரமன்
- திருநீற்று தெய்வ நலம்

## அஷ்ட லட்சுமிகளின் நாமங்கள்

- தன லஷ்மி
- சந்தான லஷ்மி
- விஜய லஷ்மி
- கீர்த்தி லஷ்மி
- தான்ய லஷ்மி
- வீர லஷ்மி
- வித்யா லஷ்மி
- சௌபாக்கிய லஷ்மி

## நவக்கிரகங்கள் ஒன்பது

- புதன்
- குரு
- கேது
- சுக்கிரன்
- சூரியன்
- சனி
- சந்திரன்
- அங்காரகன்
- ராகு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசாவதாரங்கள்

- மச்சவதாரம்
- கூர்மவதாரம்
- வராஹவதாரம்
- நரசிம்ஹ அவதாரம்
- வாமன அவதாரம்
- பரசுராமவதாரம்
- ராமவதாரம்
- பலராமவதாரம்
- கிருஸ்ணவதாரம்
- கல்கியவதாரம்

## இந்து சமயத்தின் அறுசமய கோட்பாடுகள்

| | | |
|---|---|---|
| சைவம் | - | சிவன் |
| வைணவம் | - | விஷ்ணு |
| காணாபத்யம் | - | கணபதி |
| கௌமாரம் | - | முருகன் |
| சௌரம் | - | சூரியன் |
| சாக்தேயம் | - | சக்தி |



## கடவுளை அடையக் கடைப்பிடிக்க வேண்டிய வழிகள்

- சமய அறிவைப் பெருக்குதல்.
- ஆலயங்களை தரிசனம் செய்தல்.
- மனித சமுதாயத்துக்கு தொண்டு செய்தல்.
- தர்மங்கள் செய்தல்.
- மனிதர், விலங்கினம், பறவைகள் முதலான எந்த உயிர்களுக்கும் இடர் செய்யாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க

- ★ கலையாத கல்வி
- ★ குறையாத வயது
- ★ கபடு வாராத நட்பு
- ★ கன்றாத வளமை
- ★ குன்றாத இளமை
- ★ கழுபிணி இல்லாத உடல்
- ★ சலியாத மனம்
- ★ அன்பகலாத மனைவி
- ★ தவறாத சந்தானம்
- ★ தாழாத கீர்த்தி
- ★ மாறாத வார்த்தை
- ★ தடைகள் வாராத கொடை
- ★ தொலையாத நிதியம்
- ★ கோணாத கோல்
- ★ துன்பமில்லாத வாழ்வு
- ★ இறைவன் பாதத்தில் மாறாத அன்பு

## தானத்தின் பலன்கள்

- ✳ வஸ்திரதானம் - ஆயுள் விருத்தி.
- ✳ பூமிதானம் - பிரம்மலோகத்தைத் தரும்.
- ✳ தேனை வெண்கலப் பாத்திரத்தில் வைத்து தானம் செய்தால் - புத்திரபாக்கியம் உண்டாகும்.
- ✳ நெல்லிக்காய் தானம் - ஞானத்தைத் தரும்.
- ✳ கோவிலில் தீப தானம் - உயர்ந்த பதவி தரும்.
- ✳ அரிசி தானம் - பாவம் போகும்.
- ✳ அன்ன தானம் - நினைத்தது கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குத்து விளக்கில் இருக்கும் ஐந்து முகங்கள்

- அன்பு
- நிதானம்
- சமயோசிதம்
- சகிப்புத் தன்மை
- மன உறுதி

(குடும்பப் பெண்களுக்கு இருக்க வேண்டிய ஐந்து குணங்கள்)

## முத்தி தரும் தலங்கள்

- திருவாரூர் - பிறக்க முத்தி தருவது
- திருவண்ணாமலை - நினைக்க முத்தி தருவது
- சிதம்பரம் - தரிசிக்க முத்தி தருவது
- காசி - இறக்க முத்தி தருவது

## சுவாமி கிருபானந்த வாரியார் அறிவுரைகள்

- இறைவனை வணங்குக.
- இனிமையாக பேசுக
- உண்மையே பேசுக
- அன்பாக பேசுக
- நன்மையே பேசுக
- மெதுவாக பேசுக
- சிந்தித்து பேசுக
- சபையறிந்து பேசுக
- சமயமறிந்து பேசுக
- பேசாதிருந்தும் பழகுக
- சொல்வதையே செய்க
- சோம்பலை அகற்றுக
- கோபத்தை நீக்குக
- யோசித்து செய்க
- செருக்கை அடக்குக
- உயர்வையே எண்ணுக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தில் தேங்காய் உடைப்பது

* தேங்காய் புற ஓடு - மாயையை அகற்றுவது
* உள்ளே உள்ள வெண்ணிறப் பகுதி - இறைவன்
* இளநீர் - இறைவன் அருள் சக்தியான பரமானந்த அமிர்தம்.

☞ **மாயையை அகற்றி உயிர் இறையருளை நுகரச் செய்யும் செயலைக் காட்டுவதே தேங்காய் உடைப்பதின் நோக்கமாகும்.**

## அறுபடை வீடுகள்



* திருப்பரங்குன்றம், திருச்செந்தூர்
* பழனி, சுவாமிமலை
* திருத்தணி, பழமுதிர்ச்சோலை

## தெரிந்ததும் தெரியாததும்

* முப்படை - கடற்படை, விமானப்படை, இராணுவப்படை
* நாற்படை - தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை
* பஞ்ச இலக்கணம் - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
* பஞ்ச உலோகம் - இரும்பு, செம்பு, ஈயம், பொன், வெள்ளி
* பஞ்ச கௌவியம் - தயிர், நெய், பால், கோமயம், கோசலம்
* ஐம்புலன் - கேட்டல், பார்த்தல், நுகர்தல், தொடுதல், சுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழப்பு

- கோபமாய் பேசினால் குணத்தை இழப்பாய்.
- அதிகமாய் பேசினால் அமைதியை இழப்பாய்.
- அதிகாரமாய் பேசினால் அன்பை இழப்பாய்.
- வெட்டியாய் பேசினால் வேலையை இழப்பாய்.
- வேகமாய் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்.
- ஆணவமாய் பேசினால் ஆற்றலை இழப்பாய்.
- அவதூறாய் பேசினால் இறையருளை இழப்பாய்.

## வாழ்க்கையில் இருக்க வேண்டிய ஐந்து

☆ சுவையான உணவு படைக்க அன்புள்ள தாய் இருக்க வேண்டும்.

☆ ஒழுக்கமுள்ள நடத்தைக்கு நல்ல நண்பர்கள் இருக்க வேண்டும்.

☆ நல்ல அறிவு வளர சிறந்த ஆசான் இருக்க வேண்டும்.

☆ இனிமையான இல்லற வாழ்க்கைக்கு இங்கிதமான மனைவி இருக்க வேண்டும்.

☆ தூய சிந்தனைக்கு தெய்வ பக்தி இருக்க வேண்டும்.

## கல்வி பற்றி பெரியோர்

- கல்வி என்பது வாழ்க்கைக்கு தயாராகும் என்பது அல்ல மாறாக வாழ்க்கை வாழ்வது கல்வியாகும்.
  - ஜோன்டுயி -
- முற்றும் நிறைந்த முழுமையான வாழ்க்கைக்கு பிள்ளையை ஆயத்தம் செய்வதே கல்வி.
  - ஹேபாரட் ஸ்பென்சர்-
- மனிதத் தன்மையினை மனிதர் பெற பயிற்சியளிப்பதே கல்வி.
  - வில்லியம் வோட்வெத் -
- மனிதனிடம் மறைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி.
  - சுவாமி விவேகானந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✣ அறிவை உபயோகிக்கும் அருங்கலையை அறியத் தருவது கல்வி.

- அல்பிரட் வைட் கட் -

## மொழிகளுக்குரிய சிறப்புப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| ✣ தமிழ் | - | பக்திமொழி |
| ✣ ஆங்கிலம் | - | வணிகமொழி |
| ✣ பிரேஞ் | - | காதல்மொழி |
| ✣ இத்தாலி | - | இசைமொழி |
| ✣ கிரேக்கம் | - | சட்டமொழி |
| ✣ உருது | - | கவிதைமொழி |

## ஒலிம்பிக்கின் ஐந்து நிற வளையங்கள்

| | | |
|---|---|---|
| ✢ பச்சை | - | அவுஸ்திரேலியா |
| ✢ மஞ்சள் | - | ஆசியா |
| ✢ நீலம் | - | ஐரோப்பியா |
| ✢ சிவப்பு | - | அமெரிக்கா |
| ✢ கறுப்பு | - | ஆபிரிக்கா |

## அறிவுத் தேடல்

❊ நம்மிடம் தன்னம்பிக்கை மட்டும் இருந்தால் போதும் எத்தனையோ அற்புதச் செயல்களை சாதிக்க முடியும்.

- சுவாமி சிவானந்தர் -

❊ ஆராயாமல் நட்புக் கொள்வது ஆபத்து.

- திருக்குறள் -

❊ உன்னை உலகம் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என நினைக்காதே, நீ உலகத்தை தெரிந்து வைத்திருந்து, எவ்வளவு நீ தெரிந்து வைத்திருக்கிறாயோ அவ்வளவு நல்லது.

- கன்பூஸியஸ் -

❊ மனிதா பிறர் சொல்வதையும் செய்வதையும் நீ பொறுக்க வேண்டும். பொறுமையை விட சிறந்த ஒன்று வேறேதுமில்லை.

- நற்சிந்தனை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "துதி"க்கையில் "துதிக்கை"யிலே

விநாயகர் அகவல் பாடி முடித்தவுடன் விநாயகப் பெருமான் ஔவைப் பாட்டியைத் தம் துதிக்கையால் தாங்கிக் கையிலாயத்தில் கொண்டு போய் சேர்த்து விட்டார். அங்கே திருவாயிலில் ஔவையார் உட்கார்ந்து இருந்தார். சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை காணப்போகும் வேகத்தில் பாட்டியைக் கவனிக்கவில்லை. பின் வந்த சேரமான் பெருமான் நாயனார் அங்கு ஔவையார் இருப்பதைக் கண்டார். எப்படி நீங்கள் இங்கு வந்து சேர்ந்தீர்கள்? என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அதற்கு விநாயகப் பெருமானை பூசை பண்ணினேன். அவரைத் துதிக்கையிலே, அவர் துதிக்கையிலே வந்து சேர்ந்தேன் என்றார் ஔவையார். இதில் "துதிக்கையிலே" என்ற ஒரே வார்த்தை "விநாயகரை துதிக்கும் போது" என்றும் விநாயகர் துதிக்கையால் தூக்கி விட்டார் என்றும் இரண்டு பொருள் தரும் சிலேடை நயம் குறிப்பிடத்தக்கது.

- கி. வா. ஜெகநாதன் -

## தேர்த் திருவிழா

ஆலய விழாவாகத் தேர் இழுப்பதை நாம் நமது உடம்பை ஒட்டிய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தேரில் இருப்பது போல நமக்குள்ளும் இறைவனின் பிம்பம் இருக்கிறது. தேரை இழுப்பது போல ஆசா பாசங்கள் நம்மையும் இழுக்கின்றது. தேருக்கு முன்னால் செல்லும் இசையும், நாட்டியமும் போல நமது வாழ்க்கையிலும் பல்வேறு குடும்ப பண்டிகைகளும் விழாக்களும் நடைபெறுகின்றன. தேர் முடிந்ததும் சுவாமி திரும்ப ஆலயத்துக்குள் போய் விடுகிறார். வாழ்க்கை முடிந்ததும் நமது ஆத்மாவும் அதுவரை வாழ்ந்த உடலை விட்டு விட்டு இறைவனிடம் திரும்புகிறது.

- பகவான் பாபா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீறு

திருநீறு, விபூதி, பசுமம், பசிதம் சாரம், இரட்சை என்ற பலவகைப் பெயர்களையுடையது திருநீறு. ஆன்மாக்களின் பாவங்களையெல்லாம் நீறு செய்வதனால் அது திருநீறுப் பசுமம், வி-மேலானப், பூதி - ஐஸ்வர்யம் மேலான ஐஸ்வர்யத்தினைத் தருவதால் விபூதி இங்கே மேலான ஐஸ்வர்யம் என்பது முத்திப் பேறு என்பதாகும்.

அறியாமை அழியும்படி சிவஞானமாகிய சிவ தத்துவத்தை விளக்குவதால் - பசிதம் ஆன்மாக்களின் மன மாசினைக் கழுவுவதனால் அதனை சார் ஆன்மாக்களைத் துன்பத்தினின்றும் நீக்கி இரட்சிப்பதனால் அதனை இரட்சை எனப்பொருள்படும்.

திருநீறு தரிக்காதவர்கள் செய்யும் தவம் முதலியன உவர் நிலத்தில் இட்ட விதை முளையாது வீணாவது போல பயன் தரமாட்டாது. தவம் செய்யும் ஆற்றல் இல்லாதவர்கள் திருநீற்றினை உள்ளன்புடன் பூசிக்கெண்டால் தவம், தானம், தருமம், விரதம் முதலிய யாவும் செய்த பயன்களைப் பெறுவார்கள். பிதிர் தினத்தில் திருநீறு அணிந்தவர்கள் செய்யும் தான தருமம் மிகுந்த பலன்களைக் கொடுக்கும்.



# மறு பிறப்பு

பிறப்பும், இறப்பும் வாழ்வின் எல்லைகள். இந்த இரண்டையும் கடந்து நிற்பதே ஆன்மா. அதை உணர்ந்தால் இந்த இரண்டுமே பொருளற்றதாகி விடும். தன்னை உணர்ந்த மனிதன் இந்த நிலைகளைக் கடந்து விடுகிறான். இறப்பு அவனைப் பாதிப்பதில்லை. ஆனால் வாழ்க்கையில் அவன் செய்த காரியங்கள் ஏற்படுத்தும் உணர்வுகளும், வாசனைகளும் ஆத்மாவின் பயணத்தை தொடர்கின்றன. இதனால் ஏற்படும் வேதனை தரும் பாதிப்பையே நரகம் என்றும் நல்ல காரியங்கள் ஏற்படுத்தும் இன்பம் நிறைந்த பாதிப்பையே சுவர்க்கம் என்றும் சொல்கிறோம். இதனை ஒட்டியே ஒருவனது மறு பிறப்பு அமைகிறது.

- பகவான் ரமணர் -

# பக்தியின் ஒன்பது வகைகள்

- யாதனம் - கோயில்களைக் கட்டுவித்தல். திருநந்தவனம் அமைத்தல். ஆலய திருப்பணிகள் செய்தல்.
- சிரவணம் - இறைவனின் வரலாறும் பெருமையும் பற்றிக் கூறும் நூல்களைத் தக்கவர்கள் சொல்லக் கேட்டு மகிழ்தல்.
- கீர்த்தனம் - இறைவனின் திருநாமங்களை உச்சரித்தல். இசையுடன் பாடல்களைப் பாடுதல்.
- அர்ச்சனம் - நீராட்டிப், பூச்சூட்டி, நிவேதனம் படைத்துப் பூஜித்தல்.
- ஸ்துதி - இறைவனைப் புகழ்ந்து தோத்திரப் பாடல்களை இயற்றுதல் அல்லது பாடுதல்.
- வசனம் - இறைவனின் அருட் பெருமைகளை பலருக்கும் எடுத்துக் கூறி விளக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∮ வந்தனம் - இறைவனை அஷ்டாங்கம், சாஷ்டாங்கம் முதலிய வகைகளிற் பணிந்து வணங்குதல்.

∮ மரணம் - இறைவனை எப்பொழுதும் மறவாமல் இருத்தல்.

∮ தியானம் - சுகாசன் முதலிய நிலைகளில் அமர்ந்து மனதை ஒருமுகப்படுத்தி, அன்பு செலுத்தி இறைவனை வழிபடுதல்.

## பெரியது எது?
## திருவள்ளுவர் வாயில் இருந்து...

❀ உரிய காலத்தில் செய்யப்பட்ட உதவி உலகத்தை விடப் பெரியது.

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது.

(குறள்:102)

❀ பயன் நோக்காமல் செய்யப்பட்ட உதவி கடலை விடப் பெரிது.

பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலிற் பெரியது.

(குறள்:103)

❀ அறிவில் சிறந்தவராய் இருந்தும் அடக்கமாய் இருப்பவர் உயர்வு மலையை விடப் பெரியது.

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையிலும் மாணப் பெரிது.

(குறள்:124)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் மணி ஒலிப்பதன் நோக்கம்

எல்லா மக்களுடைய மனதிலும் ஒரே நேரத்தில் இறைவனின் நினைவு வருவதற்காகவே ஆலயங்களில் பெரிய மணி கட்டி ஓசை எழுப்பப்படுகிறது. மணி ஓசை கேட்டதும் பழக்கப்பட்ட மனம் இறை வழிபாட்டுக்குத் தயாராகி விடுகின்றது.

-ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்-

# இந்துக்களின் கடமை

ஒவ்வொரு மனிதனுக்கும் சுயதர்மம், கடமை என்று ஒன்றிருக்கிறது. இன்றைய இந்துவின் கடமை அவனது இந்து நெறியைப் போற்றுவதும், கண்காணிப்பதும், சில தீய சக்திகளிடமிருந்து காப்பாற்றுவதுமாகும்.

எத்தனை சக்திகள் வந்தாலும் அழியாதது நம் இந்துநெறி, ஏனெனில் அது தனி மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. யாரோ எங்கோ ஒரு மூலையிலிருந்து கொண்டு யோசித்து உருவாக்கப்பட்டதல்ல. அது இயற்கையின் வழி வந்தது. எனவே என்றும் அது நிலைத்திருக்கும்.

என்றபோதும் களைகளை அழிக்க வேண்டியது நம் கடமை. சில குழுக்கள் தம்மிடம் ஏதோ சக்தியிருப்பது போலவும், தமது மதத்திற்கு வந்தால் தான் இறைவன் ஆட்கொள்வான் என்பது போலவும் ஆசை காட்டி ஆட்களை இழுத்து வருகின்றன. "கடைத் தெருவில் பொருள் விற்பதைப் போல"

இறைவன் எங்கும் உள்ளவன், எல்லாம் வல்லவன், அன்பு மயமானவன், அறிவு மயமானவன், என்பவனாகில் ஏதோ ஒரு மதத்திற்குள் மட்டும் அவன் புகுந்து கொள்ள மாட்டான். அப்படி அந்த ஒரு மதத்துள் மட்டும் அவன் கடவுளாக இருப்பானாகில் மற்றைய மதங்களையும், மனிதர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஏன் உருவாக்கினார்? ஏன் எல்லோருக்கும் ஒரே மதத்தை அவன் கொடுக்கவில்லை? அவன் வஞ்சகனா? பக்கச்சார்பானவனா? அறிவு குறைந்தவனா?

எனவே இவ்வாறான மூடத்தனமான கொள்கையாளர்களிடமிருந்து எம் மக்களை விழிப்புறச் செய்வது நம் கடமை. கட்டுச் சோற்றுக்குள் புகுந்து நிற்கும் எறும்பல்ல இறைவன். அவன் பூரணமானவன். எங்கும் நிறை பொருள், குறுகிய எல்லைக்குள் அவன் புகுந்து கொள்ள மாட்டான்.

எனவே காலத்தால் அளவிடமுடியாத வரலாற்றுப் பெருமைகளையும், அரும் பெரும் உண்மைகளையும், கலை சார்ந்த சிறப்புகளையும் கொண்ட தொன்மை மிகு இந்து நெறியினையும், இந்து கலாச்சார விழுமியங்களையும் காப்பாற்றி போற்ற வேண்டியது இந்துக்களாகிய நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை ஆகும்.

"இந்து என்று சொல்வோம் இந்துவாக வாழ்வோம்"

-சுவாமி ஸ்வஸ்தானந்தா-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை திரேசாவின் உள்ளத்திலிருந்து

அன்னை திரேசாவின் கூற்றிலிருந்து மனிதர்கள் பெரிதும் நேர்மையற்றவர்கள். முன்பின் முரண்பாடானவர்கள். சுயநலமுடையவர்கள். எது எப்படியானாலும் அவர்களை மன்னித்து விடு.

நீ பிறர்மீது பாசமாக இருந்தால் மனிதர்கள் அதனை சுயநலம், அந்தரங்க உள்நோக்கம் கொண்டதாக எண்ணி உன்மீது குற்றம் சுமத்துவார்கள். எது எப்படியானாலும் பிறர் மீது பாசமுடையவனாக இரு.

நீ வெற்றிக்குரியவனாக இருந்தால் நீ போலி நண்பர்களையும் உண்மையான எதிரிகளையும் சம்பாதிப்பாய் எது எப்படியானாலும் வெற்றி கொள்.

நீ நேர்மையாகவும் ஒளிவு மறைவு இல்லாதவனாகவும் இருந்தால் மனிதர்கள் உன்னை ஏமாற்றிவிடலாம். எது எப்படியானாலும் நேர்மையாகவும் கள்ளம் கபடம் அற்றவனாகவும் இரு.

நீ பல வருடங்களாக கட்டியெழுப்பியதை யாரோ ஒருவர் ஓர் இரவில் அழித்து விட முடியும். எது எப்படியானாலும் கட்டியெழுப்பு.

நீ மன அமைதியும் மகிழ்ச்சியும் அடைந்தால் மனிதர்கள் பொறாமைப் படுவார்கள். எது எப்படியானாலும் மகிழ்ச்சியாக இரு.

இன்று நீ செய்யும் நன்மையை மறுநாள் மனிதர்கள் மறந்து விடுவார்கள். எது எப்படியானாலும் நன்மை செய்.

உன்னிடமுள்ள மிகச் சிறந்ததை இவ்வுலகிற்கு கொடு. அது என்றுமே போதுமானதாக இல்லாமல் இருக்கலாம் எது எப்படியானாலும் நீ பெற்றுக் கொண்டுள்ள மிகச் சிறந்ததை இவ்வுலகிற்குக் கொடு.

இறுதி ஆராய்வில் நீ புரிந்து கொள்வாய். அந்த ஆராய்வு உனக்கும் ஆண்டவனுக்கும் இடையிலானதாகும். எது எப்படியானாலும் அந்த ஆராய்ச்சி உனக்கும் மனிதர்களுக்கும் இடையிலானதாக என்றுமே இருந்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் சாதனைகள்

- எல்லோரிடமும் அன்பு செலுத்துதல்.
- புலனடக்கம்.
- பெரியோரை மதித்து நடத்தல்.
- கடுமையான சோதனைகளை பொறுமையோடு சமாளித்தல்.
- பிறரை சிறிதும் மனம் நோக வைக்காமை.
- நாவை (பேச்சையும், உருசியையும்) கட்டுப்படுத்தல்.
- வாக்குறுதியை காப்பாற்றுதல்.
- கடின உழைப்பு கவலையைப் போக்கும்.
- புண்ணியம் செய்வோம் பாவத்தை விலக்குவோம்.
- எல்லா உயிர்களும் சுகமாய் வாழ இறைவனைப் பிரார்த்திப்போமாக.
- உடலைப் பேணவும், உள்ளத்தைப் பண்படுத்தவும்.
- தீர்க்கமாக சிந்தித்து நன்றே செய்வோம் இன்றே செய்வோம்.
- கல்வி அறிவால் மூட நம்பிக்கையை அகற்றுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திப்போம் செயற்படுவோம், உயர்வடைவோம்

- உழைப்போம் உயர்வோம் உத்தமனாவோம்.
- எப்பொழுதும் எல்லோரிடமும் அன்பு செலுத்துவோம்.
- சினம் காத்து உணர்ச்சி வேகத்தைத் தடுப்போம்.
- மிகுந்த பொறுமை, அமைதி, இன்சொல், மகிழ்ச்சி, குறைந்த பேச்சு, மௌனம் உடம்பிற்கும் உள்ளத்திற்கும் சக்தி தரும்.
- நேர்மை, நீதி, பிரார்த்தனை, பக்தி, சத்தியம்.
- இரக்கம், கருணை, ஜீவகாருண்ணியம்.
- கோபப்படாமல் ஆசைக்கு வரம்பு கட்டி காமத்தை மட்டுப்படுத்துவோம்.
- நல்ல உயர்ந்த எண்ணங்களை மனதில் வளர்த்து நல்ல செயல்களை இடைவிடாது செய்வோம்.
- தீய எண்ணங்கள் ஆழ் மனதில் பதியாவண்ணம் உடனே கிள்ளி எறிந்து நல்லதை நினைப்போம்.
- கடமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் சரிவரச் செய்வோம்.
- நம்பிக்கை, தன்னம்பிக்கை, தைரியம், துணிவு, விழிப்புணர்வு எப்பொழுதும் தேவை.
- தான தர்மம் பாவத்தை விலக்கும்.
- மனச்சாட்சியை மதித்து, தீமையை பாவத்தை முற்றிலும் விலக்குவோம்.
- நல்லதைப் பரப்புவோம், சாதனை செய்வோம் சரித்திரம் படைப்போம்.

- டாக்டர். சிவ சிவ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிராந்த்த கர்ம விளக்கம்

ஒருவரின் பிறப்புக்கு தந்தை மட்டுமே காரணமல்ல தாயும் சேர்ந்து தான் கருவாகி உருவாகினார்கள். அம்மா இல்லாத பிள்ளை இல்லை. ஓர் பிள்ளை உருப்பெற ஒரு தாய் மிகுந்த சிரமப்பட வேண்டி இருக்கும். நாம் இப் பூவுலகில் பிறப்பதற்கு அவர்களே காரணம். அவர்கள் எமக்காகப்பட்ட கஷ்டங்கள் துன்பங்கள் அனைத்தும் நீங்க அவர்களின் மறைவிற்கு பின் நினைத்து செய்யும் நன்றி "சிரார்த்தம்" எனப்படும்.

நன்றிக்கடன் தீர்க்க அரிசி மாவில் பிண்டம் போடுகின்றோம் என்றால்: தாய் தந்தை உண்ட உணவில் தான் நாம் பிறந்தோம். அம்மா தந்த உணவு முலைப்பாலாய், அப்பா தந்த உணவு சோறு என்பன நம்மை உருவாக்கி உணவால் எம்மை வளர்த்தார்கள். பிறருக்கு உணவு கொடுக்கும் நிலையில் எம்மை வைத்திருப்பவர்கள் உணவையே உருண்டையாய் ஊட்டி எப்படி உருவாக்கினார்களோ அதையே மரணித்த ஒருவருக்கு உணவாய் நன்றிக்கடன் தீர்க்க தருகிறோம் எனக்கூறி அரிசிமா சேர்த்து பிண்டம் போடப்படுகிறது.

இப்படி உருட்டிப் போட்ட பிண்டம் பின் பறவைகள், மிருகங்கள், புழுக்கள் முதலியவற்றுக்கு உணவாக அமைகிறது. ஆகவே இப் பிண்ட உணவு ஜீவராசிகளும் பயன் அடையும் பொருட்டு சிரார்த்தகர்மம் செய்வது இறந்த உயிரின் மேன்மைக்கு வித்தாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போடப்படும் பன்னிரண்டு (12) பிண்டங்களுக்கான விளக்கம் வருமாறு:

‡ மாதா : முதல் மாதம் என்னை கருவான நிலையில் வைத்திருந்த போது உங்களுக்கு ஏற்பட்ட மனக்கிலேசம் என்ற குணம் தீர முதலாவது பிண்டம் போடுகிறேன்.

‡ மாதா : இரண்டாம் மாதம் ஜீரணக் கோளாறும், மயக்கமும் ஏற்பட்ட வலி தீர இந்த இரண்டாவது பிண்டத்தைப் போடுகிறேன்.

‡ மாதா : உங்கள் இடுப்பிலும் வயிற்றிலும் ஏற்பட்ட கனம் தாங்காது கஸ்டப்பட்ட வலி தீர இந்த மூன்றாவது பிண்டம் போடுகின்றேன்.

‡ மாதா : நாலாம் மாதம் உணவு உட்கொள்ள முடியாமல் சோகையாய் கிடந்தாயே அந்த வேதனை தீர இந்த நாலாவது பிண்டம் போடுகிறேன்.

‡ மாதா : ஐந்தாம் மாதம் நடக்க சிரமப்பட்டு மலசல உபாதைகள் ஏற்பட்ட கஸ்டத்தை தாங்கினாயே அது தீர இந்த ஐந்தாம் பிண்டம் போடுகிறேன்.

‡ மாதா : நான் உனது முலைப்பாலைக் குடிக்கும் போது நீங்கள் தாங்கொணா வலியைப் பொறுத்ததற்காக இந்த ஆறாவது பிண்டம் போடுகிறேன்.

‡ மாதா : நான் நடுநிசியில் அழுதேன் அப்போது உங்கள் தூக்கத்தை கலைத்து எனது அழுகையை நிறுத்த பால் தந்து ஓராட்டிய சிரமத்திற்காக இந்த ஏழாவது பிண்டத்தை போடுகிறேன்.

‡ மாதா : நான் அறிவற்ற சிறு பிள்ளையாய் இருந்த பொழுது எனக்கு கல்வியறிவூட்டிச் சிரமப்பட்டாயே அதற்காக இந்த எட்டாவது பிண்டத்தை போடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‡ மாதா : நான் கன்னிப்பருவமாய் இருந்த போது மற்றவர்களின் பழிப்புரைக்கு ஆளாகாமல் கண்ணிமை போல் காத்தாயே அதற்காக இந்த ஒன்பதாவது பிண்டம் போடுகிறேன்.

‡ மாதா : எனது இளமைப்பருவத்தில் நல்லதோர் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்து திருமணம் செய்வித்து என்னையும் தந்தை தாயாக்கிய கடமைக்காக இந்த பத்தாவது பிண்டத்தைப் போடுகின்றேன்.

‡ மாதா : நான் செய்த தர்ம பலன் அனைத்தும் உங்களுக்கே சேர வேண்டுமென்று இந்த பதினோராவது பிண்டத்தைப் போடுகின்றேன்.

‡ மாதா : மோட்சமடைய காலம் தேவைப்படும் பட்சத்தில் வேறு பிறவி எடுக்க இருப்பின் ஒரு நல்ல பிறப்பு எடுக்கப்பிரார்த்தித்து எனது கண்ணீர் பூக்களாலும் மென்மையான பூக்களாலும் எள்ளினாலும் பாலினாலும் உங்கள் ஞாபகார்த்தமாக தாரை வார்த்து எனது தர்ம பலன்கள் அனைத்தையும் தனக்காக்கி இந்த பன்னிரண்டாவது பிண்டத்தைப் போடுகிறேன்.

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

## தனிஷ்டா பஞ்சகம் (பஞ்சமி)

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களிலும் மரணம் சம்பவித்தால் தனிஷ்டா பஞ்சக தோஷம் ஏற்படும். அவிட்டத்திற்கு 6 மாதமும், சதயத்திற்கு 3 மாதமும், பூரட்டாதிக்கு 1 1/2 மாதமும், உத்திரட்டாதிக்கு 1 மாதமும், ரேவதிக்கு 15 நாட்களும் தோஷ குற்றமாம். இந்த நட்சத்திரங்களில் ஒருவர் இறந்தால் பூதவுடலுடன் தென்னம்பிள்ளை, கமுகம்பிள்ளை, வாழைக்குட்டி, கோழிக்குஞ்சு, முட்டை இவைகளுள் ஏதாவது ஒன்றைச் சேர்த்து மயானத்திற்கு கொண்டு சென்று தகனம் செய்ய வேண்டும். பின்னர் வீட்டில் பஞ்சக தோஷ சாந்தி செய்யத் தோஷம் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்வு

மனித உடல் ஓர் அற்புதமான இயந்திரம் நமது உடல் இயற்கையோடு இயைந்து வாழ்வதற்கென அமைந்தது. இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நாம் நடக்காததாலேயே உடல் துன்பங்கள் விளைகின்றன. நோய் ஒன்றே பல அல்ல. பெயர்கள் பலவாயினும் நோய் ஒன்றுதான். நோய் நமக்கு நண்பன் பகைவன் அல்ல வேண்டாத அந்நியப் பொருள்களை வெளியேற்றம் செய்ய வேண்டும். தேவையற்ற உணவுப் பொருள்களை உண்ணாது இருக்க வேண்டும். இதைக் கண்டு பிடித்து சரி செய்வதே நோயற்ற ஆரோக்கிய வாழ்வு வாழ்வதற்கான வழியாகும். முற்றிலும் இயற்கை உணவை உண்டு இயற்கை வாழ்வு வாழ்வதே இயற்கை மகத்துவம்.

# மூச்சுப் பயிற்சி

ஓய்வு என்பது வெறுமனே படுத்துக்கிடப்பதல்ல. பல நேரங்களில் உண்மையான ஓய்விற்கு உடல் அசைவுகளும் சில பயிற்சிகளும் கட்டாயம் தேவை. முறுக்கிக் கொண்டுள்ள தசைகளை மென்மையாக்க அத்தகைய பயிற்சிகள் கட்டாயம் தேவை இதற்குச் சில ஆசனங்கள் மிகவும் உதவியாக இருக்கும்.

ஒவ்வொருவருக்கும் உடம்பின் சில பகுதிகள் மன அழுத்தத்திற்குக் காரணமாக அமைகின்றன. சிலருக்கு இதயம், சிலருக்கு வயிறு என்று பல்வேறு இடங்கள் இந்த இடங்களுக்கு இதம் தருகின்ற உடற்பயிற்சிகளை மேற்கொள்ளும் போது அது அந்த இடங்களைச் சீர் செய்து அதன் மூலம் மன அழுத்தத்தைக் குறைக்க மிகவும் துணை செய்கின்றது. இவை அனைத்தையும் விட மிகச் சிறந்த ஓய்வு தருவது மூச்சுப் பயிற்சி. மூச்சுப் பயிற்சி என்பது பிராணாயாமம் அல்ல. பிராணாயாமம் தகுந்த வழிகாட்டுதலுடன் உரிய ஒழுங்கு முறையுடன் செய்யப்படாத போது உடல் மன அளவில் பெரிய பிரச்சனைகளுக்குக் காரணமாக அமைந்து விடும். மூச்சுப் பயிற்சி என்றால் ஆழ்ந்து மூச்சு விடுவது அவ்வளவு தான். எவ்வளவு தூரம் மூச்சை உள்ளே இழுக்க முடியுமோ அவ்வளவு தூரம் உள்ளே இழுக்க வேண்டும்.

பிறகு மூச்சை உள்ளே நிறுத்தாமல் மெதுவாக வெளியிட வேண்டும் இது மனதுக்கும் உடலுக்கும் மிகுந்த ஓய்வைத் தருகிறது. மன அழுத்தம் காரணமாக வருகின்ற தலைவலி வயிற்றுவலி, மூட்டுவலி போன்ற பல்வேறு நோய்களை இந்த எளிய பயிற்சி போக்கவல்லது. மாத்திரைகளையும் மருந்துகளையும் விட எளிய மருந்து இது.

- சுவாமி பஜனானந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயுள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய உணவு முறைகள்

- வெந்தயம் ஊறப்போட்டுக் குடித்தல்
- நித்திய கல்யாணி பூ ஊறப் போட்டுக் குடித்தல்
- செங்கொய்யாக்காய் அரிந்து ஊறப்போட்டு குடித்தல்
- காட்டு மாங்காய் சம்பல்
- கறிவேப்பிலை சம்பல்
- கோதுமைத் தவிடு
- சிவப்பு அரிசித் தவிடு
- ஒடியற் கூழ்
- குரக்கன் மா பிட்டு
- தவிட்டுப்பாண், இலைக்கறி வகை
- மணத்தக்காளி
- குறிஞ்சா இலை, பாகற்காய்
- விடத்தல் இலை, தவசி முருங்கை இலை
- நாவற்பழம், நாவற்கொட்டை, நாவற்பட்டை கசாயம்
- வேப்பம்பழம், வேப்பம் துளிர், வேப்பம்பட்டைக்கசாயம்
- வில்வம் துளிர், வில்வம் பழம்
- ஆட்டா மா, குரக்கன் மா போன்றவற்றில் செய்த பலகாரங்கள்
- சலாட் கெக்கரிக்காய் பச்சைச் சம்பல் (நற்சீரகம், மிளகு, மல்லித்தூள் கலந்தது)
- பயறு, கடலை, கௌபி முதலிய தானியங்களுடன் உளுத்தம்மா கலந்து உண்ணலாம்.

# மருத்துவக் குறிப்பு

- பாகற்காயை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் இருமல், இளைப்பு, நீரழிவு, வயிற்றுப்புழு போன்ற பிரச்சனைகட்கு நிவாரணம் கிடைக்கும்.

- வேப்பங்குச்சியில் மேசையுப்பைத் தொட்டுப் பற்களைத் துலக்கி வர பற்கள் பளிச்சென்ற வெண்ணிறத்தைப் பெறும்.

- காலையில் எழுந்தவுடன் 4 தம்ளர் தண்ணீர் தினமும் பருகி வந்தால் மலச்சிக்கல் நீங்கும்.

- மஞ்சள் பொடியை வேப்பிலையுடன் சேர்த்து தண்ணீர் விட்டு அரைத்து, பூச்சிக்கடி, சருமக்கிரந்தி உள்ள இடங்களில் பூசிவரக் குணம் தெரியும்.

- பீற்றூட், கரட் போன்றவற்றைச் சுத்தப்படுத்திக் கழுவிப் பச்சையாகச் சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வேண்டிய இரும்புச் சத்துக் கிடைப்பதுடன், கண் பார்வை சீராகும். இளநரையும் ஏற்படாது.

- இரத்த அழுத்தமுள்ளவர்கள் காலையில் அரைமுடி தேசிப்பழச்சாறுடன் அல்லது இஞ்சிச் சாறுடன் இரண்டு தேக்கரண்டி தேன் விட்டு அருந்தி வர இரத்த அழுத்தம் சமப்படும்.

- தொண்டை நோவுக்கு வேப்பெண்ணையைத் தொண்டையின் வெளிப் புறத்தில் பூசிவரக் குணமாகி விடும்.

- சிறு காயங்கள் ஏற்பட்ட இடங்களில் தேன் சிறிதளவு பூசிவர காயங்கள் விரைவில் குணமாவதுடன் காயத்தின் வடுவும் நீங்கி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* படுக்கைக்கு செல்ல முன் அளவான சூடான நீரில் பாதங்களைப் பத்து நிமிடங்கள் அமிழ்த்தி வைத்துக் கொண்டால் பாதங்களில் வெடிப்புக்கள் ஏற்படாமல் மிருதுவாக இருக்கும்.

* புளியமிலைகளை அவித்து நீரை இறக்கி ஆற வைத்து, நகச் சூடாக இருக்கும் போது குளித்தால் உடல் வலி நீங்கிவிடும்.

* நல்லெண்ணையில் உலர்ந்த வேப்பம்பூக்களைப் போட்டு ஊறவைத்துக் கொண்டு தேவையான போது தலைக்குத் தேய்த்து முழுகி வர பொடுகு நீங்கிவிடும்.

* பஸ் இல் பயணம் செய்யும் போது வாந்தியெடுப்பவர்கள் காதில் பஞ்சை வைத்துக் கொண்டு பயணம் செய்தால் வாந்தி வராது.

* தினசரி காலை 1 டம்ளர் இளம்சூடான நீரில் 1மே.க. தேன் கலந்து பருகி வர உடற்பருமன் குறையத் தொடங்கும் அல்லது வாழைத்தண்டை இடித்துச் சாறு பிழிந்து வாரம் ஒரு தடவை அருந்தி வர உடல் பருமன் குறையும்.

* குழந்தைகளுக்கு இரவில் இரண்டு பேரீச்சம் பழங்களும், 1/2 தம்ளர் பாலும் உண்ணத் தினமும் கொடுத்து வந்தால் மனோபலமும், மூளைப் பலமும் ஏற்படும்.

* வாய்த்துர் நாற்றத்தைப் போக்குவதற்கு அடிக்கடி கராம்பைச் சப்பி வர வேண்டும். அல்லது இரவு தூங்கச் செல்ல முன்பு உப்பு நீரால் வாயைக் கழுவ வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். திரு.

# வி. விசாகப்பெருமாளின்

# நினைவலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். புன்னாலைக் கட்டுவன் வடக்கு மாப்பனாவளவை
பிறப்பிடமாகவும், திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர். வி. விசாகப்பெருமாளின்
# வாழ்க்கை வரலாறு

14/01/1931ம் ஆண்டு யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவனில் பிறந்தார். இவருக்கு அமரர். வி. சிவஞானம், அமரர். பூதப்பிள்ளை, அமரர். நாகரெத்தினம், அமரர். சரஸ்வதி ஆகியோர் சகோதரர்கள் ஆவார்கள். புன்னாலைக்கட்டுவன் ஆங்கிலப் பாடசாலையில் ஆரம்பக்கல்வியையும், பின்னர் யாழ். மத்திய கல்லூரியில் உயர்கல்வியையும், கற்றுத்தேர்ந்தார்.

கல்வியை முடித்த பின் இவரின் தமயனார் திரு. வி. சிவஞானம் அவர்களினதும், ஒன்று விட்ட தமயனார் திரு. செ. வைத்தியலிங்கம் அவர்களினது உதவியினாலும், திருகோணமலைக்கு வந்து நீர்பாசன இலாக்காவில் வேலை செய்தார். அதன் பின்னர் DR. S. சிவானந்தம் நகராட்சி மன்ற தலைவராக இருந்த காலத்தில் சோலைவரி அறவிடும் உத்தியோகத்தராக கடமை ஏற்றார். வருமானப் பற்றாக்குறை காரணமாக பிரபல வர்த்தகர் திரு. சம்பந்தர் அவர்களின் பெற்றோல் நிரப்பும் நிலையத்தை குத்தகைக்கு எடுத்து நடாத்தினார்.

1965ம் ஆண்டு சுப்பிரமணியம் தனலெட்சுமி என்னும் ஆசிரியையை திருமணம் செய்து கொண்டார். சாதாரண ஆசிரியராக இருந்த மனைவியை பயிற்சி ஆசிரியராக பதவி உயர்வு பெற ஆவணசெய்தார். இல்லறத்தின் பயனாக சுமதி, பாலமுரளி, பாமதி, பாலகுமரன் என நான்கு பிள்ளைகளை (ஆண்(2), பெண்(2)) பெற்று வளர்த்து கல்வியறிவை ஊட்டினார். திருமதி. தனலட்சுமி அவர்கள் கல்வி கற்பிப்பதில் காட்டிய ஆர்வம் அவரை பகுதித் தலைமை ஆசிரியராக பதவி உயர்வடைய வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கியதால் மகன் பாலமுரளியை கர்நாடக சங்கீதத்தில் கைதேர்ந்தவர் ஆக்கினார். திருகோணமலைக்கு சீர்காழி கோவிந்த ராஜன் வருகை தந்த போது அவர் முன்னிலையில் மகனை சீர்காழியின் பாடல்களை பாடவைத்து பாராட்டைப் பெற தாய், தந்தை இருவரும் காரணமாக இருந்தனர்.

"உழுதுண்டு வாழ் வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வர்" என்னும் குறள் வழிக்கேற்ப பன்குளத்தில் காணிகளைப் பெற்று வயல் செய்தார். அதில் அமோக விளைச்சலைப் பெற்று சாதனை படைத்தார். அதனால் நெல்குத்தும் "கண்ணா றைஸ்மில்" என்ற அரிசி ஆலையை ஆரம்பித்து நடாத்தினார்.

மகள் சுமதியை பல்கலைக்கழகம் அனுப்பி மிருக வைத்தியராக பட்டம் பெறவைத்தார். இரண்டாவது மகள் பாமதியை புடவை உற்பத்தித் தொழில் பொறியியலாளராகவும், படிக்க வைத்தார். பினனர் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்தார்கள்

சுமதி பொறியியலாளர் திரு. கருணாகரனை திருமணம் செய்து ஹரேந்திரா, ஹார்த்திக் இரு குழந்தைகளையும் பெற்றெடுத்தனர். நாட்டுச் சூழல் காரணமாக பாலமுரளி சுவிஸ் நாட்டுக்குச் சென்றார். அங்கு உமா என்னும் பெண்ணைத் திருமணம் செய்து வீவியன், சாரா, சசீரா என்னும் பெண் குழந்தைகளைப் பெற்று வளர்த்தார்கள். இரண்டாவது மகள் பாமதிக்கு பொறியியலாளர் திரு. நிர்மலனை திருமணம் செய்து வைத்தனர். இவர்களின் இல்லறத்தின் மூலம் வைஷாலி, ஏரகன் என இரு குழந்தைகளைப் பெற்றார்கள். கடைசி மகன் பாலகுமரன் பகீரதி என்னும் பெண்ணை திருமணம் செய்து மனோஜ், சந்தோஷ், அக்ஷயா என்னும் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டனர். பத்து பேரன், பேத்திகளைப்பெற்றுக் கொண்டு சந்தோஷமாக வாழ்க்கையை மேற்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. திருமதி. விசாகப்பெருமாள் இருவருக்கும் இடைக்கிடையே நோய் பற்றிக் கொண்டது. இருவரும் தனியாக வசித்து வந்த நேரத்தில் 2002ம் ஆண்டு தனது மனைவியை பறிகொடுத்தார். இதனால் கவலையுற்று தனியாக வாழ்ந்து வந்தார். இறைபணியில் தனது இறுதிக் காலத்தை செலவிட்டார். பிள்ளைகள் இவரை கனடா நாட்டுக்கு அழைத்துச் செல்ல பெரு முயற்சிகளை மேற்க் கொண்டனர். ஆனால் அவருக்கு திருக்கோணேசர் குடிகொண்ட திருக்கோணமலை விட்டுச் செல்ல விரும்பவில்லை. தன் வீட்டு க்கு அருகமையிலுள்ள சமாது விநாயகர் கோவில், மாரியம்மன் கோவில், சிவன் கோவில், கிருஸ்ணன் கோவில் என கோவில்களுக்கு அடிக்கடி சென்று இறைவணை வணங்குவதே தனது வேலையாகக் கொண்டார். இரு வாரத்திற்கு முன் அவருக்கு உள்ள நோய்கள் அதிகரிக்க தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. நோயின் தாக்கம் அதிகரிக்க கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட போதும் நோயின் தாக்கம் குறையாது 02.08.2012 அதிகாலை 5.30 மணிக்கு இறையடி சேர்ந்தார். அவரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திப்போமாக.....!

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி.............!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வேதாகமமாமணி "

**பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்**

(சமாதான நீதுவான்)

ஆலய பிரதம குருவும், ஆதீனகர்த்தாவும்

**ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்**

திருகோணமலை

திருகோணமலையை வாழ்விடமாகக் கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்து விண்ணுலகு எய்திய திரு. விஸ்வலிங்கம் விசாகப்பெருமாள் அவர்களின் இறப்பு எம்மையெல்லாம் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவர் தனது ஆரம்பக்கல்வியை பிறந்த இடமான புன்னாலைக்கட்டுவனிலும், உயர் கல்வியை யாழ்/ மத்திய கல்லூரியிலும் கசடறக் கற்று அதன்படி வாழ்ந்து காட்டியவர்.

திருக்கோணமலை நகர வரியிறுப்பாளராக கடமையாற்றிய இவர் இம்மண்ணை தனது தாயகமாக கொண்டு கமம் செய்து தானும் உண்டு பிறருக்கும் உணவழித்து வாழ்ந்தவர்.

இவர் சிறந்த இறைபக்தியும், அடியார்களைப்போற்றும் தன்மையும் கொண்டவர். எமது சமய வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் பற்றுறுதியோடு அயராது உழைத்தவர். குறிப்பாக சமாதுப்பிள்ளையாருக்கு மணிக்கோபுரம் அமைத்துக்கொடுத்து தனதுசமயப்பணியை வெளிக்காட்டியவர். அத்துடன் ஏனைய திருத்தலங்களுக்கும் உதவுவதில் முன்னிற்பவர்.

வசை யென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறா அ விடின்

என்ற பொய்யா மொழியின் வாக்குக்கு இசைவாக நிலைத்து நிற்கக் கூடிய புகழைப் பெற்று பெருமகனாக வாழ்ந்தவர்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1983ல் அமரர். வி. விசாகப் பெருமாள் இல்லத்தில்
கிருபானந்தவாரியார்சுவாமிகள் பூசை செய்யும் காட்சி



அமரர். வி. விசாகப் பெருமாள் மூத்த சகோதரர்
அமரர் வி. சிவஞானத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. விஸ்வலிங்கம் விசாகப் பெருமாள் அவர்கள்

ஐயா திருகோணமலையில் உயிர் வாழ்ந்த காலம் முழுவதும் என்னோடு நெருங்கிப்பழகியவர். சமய சமூக பொதுத் தொண்டுகளில் பங்கு பற்றிச் சேவை செய்தவர்.

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் கிராமத்தில் 14.01.1931ல் பிறந்தவர். புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்திலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கல்வி கற்றவர்

இலங்கை வங்கி முகாமையாளராக பணியாற்றி சிவபதமடைந்த திரு. வி. சிவஞானம் ஐயாவின் தம்பி விசாகப்பெருமாள் ஐயா தமையனுடன் புன்னாலைக்கட்டுவனை விட்டு திருகோணமலைக்கு 1956ம் ஆண்டு வந்து சேர்ந்தார். வேறு தொழில்களில் ஈடுபட்டபின் 1960ம் ஆண்டு தொடக்கம் திருகோணமலை நகர சபையில் வரிவசூலிப்பவராக தொழில் புரிந்து வந்தார்.

ஆசிரியை அமரர். தனலெட்சுமி அவர்களைத் திருமணம்செய்து இல்வாழ்க்கையைச் சீரும் சிறப்புமாக நடத்தினார். நாலு பிள்ளைகள் (2 ஆண், 2 பெண்) எல்லோரும் வெளிநாட்டில் தொழில் புரிகிறார்கள். நல்ல சுகமாகவும், சந்தோசமாகவும் வாழ்கிறார்கள்.

ஐயா எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகுவார். எல்லோருக்கும் உதவி செய்வார். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் ஆலய வழிபாடுகளிலும் சமய சமூக பொதுத் தொண்டுகளிலும் ஈடுபட்டுச் சேவை செய்வார். சமாதுப்பிள்ளையார் ஆலயத்திற்கு மணிக்கோபுரம் அமைத்துக்கொடுத்தார். சிவன் கோவில், முத்துக்குமாரசுவாமி கோவில், கண்ணகி அம்மன் கோவில்களில் வருடாந்த உபயங்களைச் செய்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ உலகப் பிரசித்தி பெற்ற கிருபானந்தவாரியார் சுவாமிகள் 1983ல் சிவன் ஆலய கும்பாபிஷேக நிகழ்ச்சியில் பங்கு பற்றிப் பிரசங்கம் நிகழ்த்த வந்த போது அன்பர் விசாகப்பெருமாள் ஐயா வீட்டில் தங்கியிருந்து சிவப்பணிகளை மேற்கொண்டார்கள். இந்நிகழ்ச்சி விசாகப் பெருமாள் குடும்பம் செய்த தவப் பயனேயாகும்.

ஐயாவின் சகோதரர்கள் திரு. சிவஞானம் திரு. பூதப்பிள்ளை, திருமதி. நாகரத்தினம், திருமதி. சரஸ்வதி ஆகியோர்.

விசாகப்பெருமாள் ஐயா 02.08.2012இல் சிவபதமடைந்தார்கள்.

ஊழிற் பெருவலி யாவுள் மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத்து இவ்வுலகு

- திருக்குறள் -

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கும் அதுவழியே நாம் போமளவும்
எமக்கென்னென்று இட்டு உண்டு இரும்


- நல்வழி, ஔவையார் -

ஐயாவின் பிரிவால் துயருறும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆறுதல் அடையவும் ஐயாவின் ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.


இன்பமே சூழ்க.
எல்லோரும் வாழ்க.
பொ. கந்தையா (காந்தி ஆசிரியர்)
முத்துகுமாரசுவாமி கோவிலடி
திருகோணமலை.
15.08.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். புன்னாலைக் கட்டுவன் இல்லத்தில்
அமரர். வி. விசாகப்பெருமாள் சகோதர சகோதரிகளுடன்



அமரர். வி. விசாகப் பெருமாளும் அவர் மனைவி
அமரர் தனலெட்சுமியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டுக்கு விசாகப் பெருமாள்

அமரர் விசாகப் பெருமாள் எனது உயிர் நண்பர். பல வருடங்களாக அயல் வீட்டவனாக இருந்து அவருடன் நன்கு பழகும் வாய்ப்புக் கிட்டியது.

முருக பக்தரான அமரர் சிவஞானம் அவர்களின் அன்புச் சகோதரர் அமரர் விசாகப் பெருமாள். இவரை திருக்கோணமலைக்கு அழைத்து வந்தவர் அவரது அண்ணன் என்பதை நாம் அறிவோம்.

திருக்கோணமலை நகராட்சி மன்றத்தில் சோலைவரி அறவிடும் உத்தியோகஸ்தராக கடமையாற்றிய காலத்தில் திருக்கோணமலை நகராட்சி மன்றத் தலைவர்களால் பாராட்டு பல பெற்றவர்.

இக்காலத்தில் திருக்கோணமலையை பிறப்பிடமாகக் கொண்ட தனலட்சுமி அவர்களை திருமணம் செய்து கொண்டார். தனலட்சுமி அவர்களும் அமரரானார்.

சைவசமய நிகழ்ச்சிகளில் மிகவும் அக்கறையுடன் கலந்து அந்நிகழ்வுகள் சிறப்படைய தமது பங்களிப்பை செய்து மகிழ்ந்திருப்பார். ஆலய திருப்பணிகளுக்கும் தனது பங்களிப்பினை வழங்கியுள்ளார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் மூத்த தொண்டனாக பணியாற்றியவர் என்பதை திருக்கோணமலை மாவட்ட மூத்த தமிழரசுக்கட்சி தொண்டர்கள் நன்கு அறிவார்கள்.

பல்வேறு சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு விளங்கிய அமரர் விசாகப்பெருமாள் அவர்களது நாமம் என்றும் திருக்கோணமலையில் நிலைபெறும் என்பது திண்ணம்.

**அவரின் அன்பு நண்பன்**
**கோ. இராமச்சந்திரன்**
**(இராமபாலன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பின் நண்பன் விஸ்வலிங்கம் விசாகப்பெருமாளிற்கு

அன்பின் உருவாய், ஆற்றலில் சிகரமாய், பண்பின் பிறப்பிடமாய், பல வருடங்களாய் நண்பனாய் மட்டுமல்ல சிறந்த வழிகாட்டல் ஆசானாய் என்னோடு தோளோடு தோள் நின்று உதவிய காலமெல்லாம் எண்ணி, இன்று உங்கள் பிரிவால் ஆற்றொணணாத் துயர் கொள்கின்றேன். முப்பது வருடங்கள் உங்களைப் பிரிந்து வெளிநாட்டில் நான் வாழ்ந்த போதும், உங்கள் அறிவுரையால் நான் பல இன்னல்களுக்கு மத்தியிலும் சாதனை படைத்தேன். ஆனால் அப்படியான ஒரு ஆசானை இன்று இழந்து தவிக்கின்றேன்.

இறுதி நேரத்திலாவது உங்களைக் காண நான் வந்தபோது கடுமையான நோயின் போதும் என்னை அடையாளம் கண்டு கட்டிப்பிடித்து அழுததை எண்ணி இன்று மனம் வெதும்புகின்றேன். ஒருவருடைய கண்ணீரின் வேதனையை அவரவர் கண்ணீரில் தான் உணரமுடியும் என்பார்கள். என்னிடம் எவ்வளவு பாசம் வைத்து இருந்தீர்கள் என்பதை உங்கள் கண்ணீரில் இருந்து உணர்ந்தேன். முப்பது வருடங்களின் பின்பு உங்களைக் காணும் வாய்ப்பை ஆண்டவன் எனக்குத் தந்தான். நீங்கள் இறைவனடி சேர்ந்தாலும் இன்னும் என்னுடனேயே இருப்பதாய் உணர்கின்றேன். அண்ணா! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம்பெருமான் திருக்கோணேஸ்வரரை இறைஞ்சி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஜெயமதி உணவகம்**
**(திருமலை),**
**(பிரான்ஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர். வி. விசாகப் பெருமாளும், பிள்ளைகளும்




அமரர். வி. விசாகப் பெருமாள் தனது 80வது பிறந்த தினத்தில் சகோதரர், பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர், அமரர் விஸ்வலிங்கம் விசாகப்பெருமாள்

நான் 1964ம் ஆண்டு, முதன் முதலாக திருக்கோணமலை வந்து எங்கள் பரம்பரை வைத்தியமாகிய முறிவு, நோவு வைத்தியசாலையை ஆரம்பித்து மக்களுக்கு சேவையாற்றி வந்தேன்.

3 வருடங்களுக்கு பின் நான் கல்வி கற்க சென்பற்றிக்ஸ் கல்லூரி (St. Patick's College, Jaffna)யில் படித்த நண்பர் திரு. ஜெயரட்ணத்தை சந்தித்தேன். அவர் தனக்கு இங்கு ஒரு அண்ணா இருப்பதாக கூறி திரு. சிவஞானம் அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தினார். அன்று தொடக்கம், அன்னாரின் குடும்பத்தாருடன் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரின் மனைவி தேவி அக்காவும், பிள்ளைகளும் என்னை தங்கள் குடும்பத்தில் ஒருவராக மதித்து நடந்தார்கள்.

எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் சிவஞானம் அண்ணர் வீட்டுக்கு போவேன். அங்கே தான் திரு விசாகப் பெருமாள் எனக்கு முதன்முதல் அறிமுகமானார். இங்கே தான் அவரை அடிக்கடி சந்தித்து பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் தமிழரசுக்கட்சியின் தொண்டராக கடமையாற்றிய போது அமரர். விசாகப் பெருமாளும், தமிழரசுக் கட்சியுடன் இணைந்து இருந்தார். இதனால் எம் இருவர் மத்தியிலும். அரசியல் தொடர்பும் பொது விடயங்களில் ஈடுபாடும் ஏற்பட்டது. தொழில் ரீதியாக நான் பல விடயங்களில் ஈடுபட்ட பொழுது. அவரும் சுயதொழில் செய்த காரணத்தினால் தொழில்ரீதியிலும் எங்கள் மத்தியில் இணைப்பு நீண்டு சென்றது. இந்த நட்பால் அவர் மனைவி பிள்ளைகளுடனும் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் அனைவரும் என்னை தங்கள் குடும்பத்தில் ஒருவராக மதித்து நடந்து கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு விசாகப்பெருமாள் இனப்பிரச்சனை நேரங்களில் அரசியல் ரீதியாகவும், வியாபாரரீதியாகவும் தலைதூக்க!!! தலைகாட்ட!!! முடியாதிருந்த என்னை மறைமுகமாக சந்தித்து ஆறுதல் கூறியும், ஆலோசனைகள் வழங்கியும், எனக்கு மனத்தைரியத்தை ஏற்படுத்தியதை என்றும் என்னால் மறக்க முடியாது. அப்படிப்பட்ட ஓர் அன்பரை நான் இழந்துவிட்டேன்.

23.09.2011ம் திகதி இறையடி சேர்ந்த திரு. வி. சிவஞானம் அண்ணனின் இறுதிக்கிரியையில், கலந்து கொண்ட போது ஜேம்ஸ் நான் இறந்தாலும் எனக்கும் இது போன்று முன்நின்று உதவி செய்வியா என்று கேட்டார்!!!

21.07.2012 அன்று திரு. விசாகப்பெருமாள் கடும் சுகயீனமாக திருமலை தன்வந்தரி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ள செய்தி அறிந்து, உடனே சென்று பார்வையிட்டு, அவரின் நிலமையை டாக்டர்கள் மூலம் அறிந்து, அவருக்குத் தேவையான மருத்துவ உதவிகளை, அவரின் உறவுகளுடன் நின்று செய்து அவருக்கு மனத்தைரியத்தையும் ஊட்டினேன்.

பின்பு அவர் கொழும்பு டேடன்ஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அங்கும் சென்று பார்வையிட்டேன். அவரின் நிலை மிகமோசமாக இருப்பதை அறிந்தேன். அவரின் உறவினர்களுடன் நிலைமையை பகிர்ந்து கொண்டேன். மறு நாள் 02.08.2012 காலமான செய்தி அறிந்தவுடன் கொழும்பிலிருந்து வந்து அவரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டேன். அவர் கூறிய படி அவரின் இறுதிக்கிரியைகளை அவரின் உறவினர்களுடன் கூட நின்று நிறைவேற்றினேன்.

எனது உற்ற நண்பனை இழந்துவிட்டேன் அவரை இழந்து தவிக்கும் அவரின் அன்புச் செல்ல பிள்ளைகளுக்கு எனது மன ஆறுதலை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மாசாந்தி அடைய பிரார்த்திக்கிறேன்.


**ஜேம்ஸ் சமத்தர்**
"Silver Star Inn"
27, College Street, Trincomalee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருமக்கள், பெறாமகள் ஆகியோருடன் சுவிஸ்லாந்தில்
அமரர். வி. விசாகப் பெருமாள்




தனது 80வது பிறந்த நாளில் அமரர். வி. விசாகப் பெருமாள்
மகன், மருமகள், பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சித்தத்தில் தித்திக்கும் நினைவுகள்

என் தந்தையிலும் மேலாக அன்புகாட்டி
உங்கள் பிள்ளைகளில் ஒன்றாக பாசம் வைத்து
என்மீது காட்டிய பரிவும் கவனமும்
என் சித்தத்தில் என்றும் தித்திக்கும் நினைவுகள்

இலங்கைவந்த போதெல்லாம் உங்கள்வீடே என்வீடாய்
உங்களுக்குச் சேவைசெய்யும் பாக்கியமும் எனதாயிற்று
இந்தியா சென்று சிகிச்சை பெற்ற போதும் எனை அழைத்து
உங்களைப் பேணும் சிறப்பை எனக்களித்து மகிழ்ந்தீர்கள்

சிறுமியாக உங்கள் வீட்டால் பள்ளி செல்வேன்
நீங்கள் பார்க்க வளர்ந்து உங்கள் மருமகளானேன்
நீங்கள் சொன்ன சொற்படியே என்றும் செயல்படுவேன்
பிரிவு எம்மைப் பிரித்தாலும் பிரியாதிருப்பேன் நினைவால்

**அன்பு மருமகள்**
**பகீரதி - பாலகுமாரன்**

# எனதன்பின் அப்பப்பா

எனக்கு உங்களில் நிறைய விருப்பம் உங்களுடைய Presentsக்கு நன்றி உங்களின் கையில் கட்டுவதற்கு ஒரு கை மாலை செய்து கொடுத்தேன். உங்களை ஒரே Computerஇல் தான் பார்த்தனான். நேரடியாக இதுவரை பார்த்ததில்லை. இன்று நீங்கள் சொர்கத்தில் எந்த வருத்தமும் இன்றி உள்ளீர்கள் எனக்கு நீங்கள் வேண்டும். திரும்பி வர வேண்டும் அந்த நாளை எதிர்பார்க்கும்.



**Sasira**
**பேரப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Loveable Grandfather

*In the past year which was the 2nd year of the 21st century (2011) I went to a country called Ceylon (Sri Lanka) !*


*As soon as we got there, the first place we went to my grandfather's house.*

*He Gave me a huge hug !*

*My grandfather has a caring heart and I hope that all the people that read this have a grate love for his amazingly kind ways...............................*

*He may have needed help with same things but let's face it, he was 80 years old. Even though you gotta admit, he was like a lean clean friendly machine.*

*We love him............. grandsons :* ***Hariindra and Karthy***






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர். வி. விசாகப் பெருமாளின்
மகள், பேரப்பிள்ளைகள்



அமரர். வி. விசாகப் பெருமாள்
மனைவி, பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Lanka Grandpa

*Even if we didn't know our grandpa very well, he played a major role in our lives. Sri Lanka grandpa - as we always called him - will always remain in our thoughts. we can't believe that he has gone now.*
*Back we are left with memories of a few but lovely times we had with him.*
*We will never forget you.*

**In Love**
**Sarah & Vivienne**

## Here are some words from the kids of Bamathy Nimalan and Balakumaran Visagaperumal.... Manojh, Santhosh, Vaishaalie, Earagan, and Akshaya

**Manojh Balakumaran (Age 14)** : *When i got first rank in my school, my grandfather asked a simple question with tears of joy. The simple question was " What do you want as a reward?", I shook my head and said - "I don't know..". This Happened when i as 6. Now i am 14 and i finally have an answer... I heard of this very famous saying in india-***"and thats when you enter this world, you will be sad and they will be happy. So when you die, they will be sad and you SHOULD be happy"***... Be happy, be happy for the fact that you get to see appamma again and don't worry we will be coming someday... maybe not now but someday...."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Santhosh Balakumaran (Age 12)** : *"This happened when i was 5. There was a bee hive in the tree that was in front of our grandfather's house. For some reason i wanted honey that day and i asked my grandfather to get it for me, and he did! just for me, he put his gloves on and digged in the bee hive. There were many bees in the hive that day, but he still got the honey for me. I am 12 now, and when i look back at it, i think that it was a stupid thing to do, but still.... my grandfather did it for me."*

**Vaishaalie Nimalan (Age 11)** : *"I don't remember what happened when i was young, but i do have a great memory that happened recenly when i visited Sri-lanka. It's not really a big memory, but it's something special that happened which stayed in my mind. The day that i arrived in trinco, i couldn't wait to see my ammapa. When i first saw him, i was amazed on the expression on his face. He was overjoyed, i think that he was also slightly crying. He kissed me and my brother many times. The happiness that i saw on his face, was my best memory. There could be nothing more special than that. I love you ammapa!!"*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர். வி. விசாகப் பெருமாளின் பேரப்பிள்ளைகள்



அமரர். வி. விசாகப் பெருமாளின் பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***Earagan Nimalan (Age 6)*** : "My best memory is how ammapa always cares about me and my sister every minute, and we ate or not, or if we are feeling well. I like the way that he cares about us, he realy does love us"

***Akshaya Balakumaran (Age 6)*** : "I allways like holding thatha's hand in my hand. Wherever i go, i hold his hand. And everytime i come from somewhere, the first thing i do is go and hug him, then i play, with thatha of course"

***" Love begins with a smile, grows with a kiss, ends with a tear. When you were born, you were crying and everyone around you was smiling, Live your life so that when you die, you're the one smiling and everyone around you is crying"***

***Ammapa has't left us, he is still watching us from the sky with ammama. From above they will take care of us.***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்றமகற்கு

- குறள் -

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு எமது தந்தை அமரர். வி.விசாகப்பெருமாள் நோய்வாய்பட்டு இருந்த போது நேரடியாக வைத்தியசாலைக்கு வருகை தந்து ஆறுதல் கூறி உதவி புரிந்தவர்களுக்கும், இறையடி சேர்ந்தார் என்ற செய்தி அறிந்தவுடன் ஓடோடி வந்து உதவிபுரிந்தவர்களுக்கும், வெளியிடங்களிலிருந்து வருகை தந்து கலந்து கொண்டவர்களுக்கும், வெளிநாட்டிலிருந்து ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்தும், பெனர் கட்டி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவி புரிநிதவர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும்.

விசாக தீபம் என்னும் சிறு நூலை அச்சிட்டு தந்த நியூ உதயன் அச்சகத்தின் முகாமையாளர், மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும், நூலை சரி பார்த்து உதவிய திருமதி சஹிதரன் அவர்களுக்கும் 31ம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்தவர்களுக்கும், கிரேஸ் சிறுவர், முதியோர் இல்ல உத்தியோகத்தர்கள், பிள்ளைகள், முதியோர்கள் அனைவருக்கும் எமது மேலான நன்றிகளை பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கின்றோம்.

Uppuveli Public Library
0008675

இவ்வண்ணம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை

**விஸ்வலிங்கம் + தெ**

சிவஞானம் (அமரர்)

பூதப்பிள்ளை (அமரர்)

நாகரெத்தினம் (அமரர்)

சுமதி
+
கருணாகரன்

ஹரேந்திரா
கார்த்தி

பாலமுரளி
+
உமா

வீவியன்
சாரா
சவீரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியில்

**தெய்வானைப்பிள்ளை**

சரஸ்வதி
(அமரர்)

**விசாகப்பெருமாள்**
**(அமரர்)**
+
**தனலெட்சுமி**
**(அமரர்)**

பாமதி
+
நிமலன்

வைசாலி
ஏரகன்

பாலகுமரன்
+
பகீரதி

மனோஜ்
சந்தோஷ்
அக்சயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org